BRAMPTON Service and Information Update

# ப்ராம்ப்ட்டன் நகர பணியாளர்கள் தடுப்பூசி செலுத்திக்கொண்டிருக்க வேண்டும் என்பதற்கான ஆணை அக்டோபர் 4 முதல் செயல்வடிவுக்கு வருகிறது

ப்ராம்ப்ட்டன், ON (செப்டம்பர் 23, 2021) – அனைத்துப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கும் ஆரோக்கியமானதும் பாதுகாப்பானதுமான பணிச்சூழலை வழங்குவதில் ப்ராம்ப்ட்டன் நகரம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. மீண்டும் திறத்தல் சட்டம் மற்றும் பணிசார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புச் சட்டம் (OHSA ஆகியவற்றின் கீழாக, அனைத்துப் பணியாளர்களுக்கும் பாதுகாப்பான சூழலை உறுதி செய்ய, நகர நிர்வாகம் ஒரு சட்ட ரீதியான கடப்பாட்டினை வரைவு செய்துள்ளது.

தொழிலாளர் பங்காளிகளுடன் தொடர்ந்து நடைபெற்றுவரும் கலந்தோசிப்பு மற்றும் அது தொடர்பான பணிகளில், பொதுமக்களின் சுகாதாரம் மற்றும் மாகாண ஒழுங்குமுறைகளுக்கு ஒத்துப் போகும் வகையில் நகர நிர்வாகம் கோவிட்-19 தடுப்பூசி செலுத்தும் ஆணை ஒன்றை நடைமுறைப்படுத்துகிறது; இது அக்டோபர் 4 ஆம் தேதி முதல் செயல்வடிவுக்கு வருகிறது.

இந்த ஆணையின் கீழாக, அக்டோபர் 15, 2021 வெள்ளிக்கிழமைக்குள்ளாக, அனைத்து ப்ராம்ப்ட்டன் நகர பணியாளர்கள், ஒப்பந்ததாரர்கள், ஆலோசகர்கள், மாணவர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோர் தாங்கள் கோவிட்-19 தடுப்பூசி செலுத்திக்கொண்டது பற்றிய ஆதாரத்தை வழங்க கோரப்படுகிறார்கள். விதிவிலக்குகள் பெற்ற தனிநபர்கள் ஒன்ட்டேரியோ மனித உரிமைகளுக்கான நெறிமுறை கீழாக விலக்கு பெறுவார்கள்.

தடுப்பூசி செலுத்திக்கொண்டிருக்காத பணியாட்கள், மற்றும் இந்த ஆணையைத் தொடர்ந்து தடுப்பூசி செலுத்திக்கொள்ள முடிவு செய்பவர்கள், நவம்பர் 14, ஞாயிற்றுக்கிழமைக்குள்ளாக தாங்கள் தடுப்பூசி செலுத்திக்கொண்டதற்கான ஆதாரத்தை வழங்கிவிட வேண்டும்.

நவம்பர் 15, 2021 திங்கட்கிழமையன்று, தடுப்பூசி செலுத்திக்கொண்ட சான்று வழங்காத பணியாளர்கள் மற்றும் கோவிட்-19 தடுப்பூசி செலுத்துவதில் இருந்து விலக்கு பெற்றதற்கான அங்கீகாரம் கொண்டிருக்காதவர்கள் கோவிட்-19 தடுப்பூசி செலுத்திக்கொள்வதன் அவசியம் பற்றிய ஒரு வகுப்பில் படித்து தெரிந்து கொள்வது அவசியமாகிறது. கூடவே, தடுப்பூசி செலுத்திக்கொண்ட சான்று வழங்காத பணியாளர்கள், வழக்கப்படியான கோவிட்-19 சோதனைக்கு உட்படுவது அவசியமாகும். பணியிடங்களுக்கு வேலை பார்க்கச் செல்வதற்கு கோவிட்-19 தொற்று இல்லை என்ற முடிவினைக் கூறும் சான்றினை கொண்டிருக்க வேண்டும்.

பீல் பிராந்தியத்தின் மிகப்பெரும் எண்ணிக்கையிலான 6,000 க்கும் மேற்பட்ட பணியாளர்களைக் கொண்டபடி ப்ராம்ப்ட்டன் நகரம் திகழ்ந்து வருகிறது. தான் சேவையாற்றும் சமுதாயம் மற்றும் அதன் பணியாட்களின் நல்வாழ்வை முன்னுரிமையாகக் கொண்டபடி, பணியிட ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பிற்கு நகரம் அர்ப்பணிப்பு கொண்டுள்ளது. கோவிட்-19 க்கு எதிராக மேற்கொண்டும் பாதுகாப்பு வழங்குவதற்காக, செயலூக்கமுள்ள நோய்கண்டறிதல், சமூக விலகலைக் கடைப்பிடித்தல், சொந்த பாதுகாப்பு உபகரணம் கைவசம் வைத்திருத்தல் ஆகிய அவசிய தேவைகள் நடைமுறையில் இருக்கும்.

-30-

**ஊடக தொடர்பு** :
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca